# பல்லூடவழிப் பழந்தமிழ் இலக்கியக் கருத்தாடல்
## இலக்கியம் கற்றல் கற்பித்தல் அடிப்படையில்
## (Sangam Literature Teaching and Learning through Multimedia)

முனைவர் வா. மு. சே. முத்துராமலிங்க ஆண்டவர்
Dr. Vallmuthu Muthuramalina andavar
தமிழ் இணைப்பேராசிரியர்
மு.வ. முதுகலை உயராய்வு மையம்
தமிழ்த் துறை, பச்சையப்பன் கல்லூரி
சென்னை- 30
sethuandu@yahoo.co.in

அயலக ஆய்வறிஞர்களால் ஏற்கனவே செம்மொழியாக ஏற்புப் பெற்றிருந்த தமிழ் நீண்ட போராட்டங்களுக்குப் பிறகு 2004 ஆம் ஆண்டு இந்தியப் பேரரசால் முறையாக அறிவிக்கப்பட்ட இந்திய மொழி தமிழ். இந்தப் பின்னணியில் பழந்தமிழ் இலக்கியங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அயல்நாட்டு, தாய்நாட்டு அறிஞர்களுக்கும் ஆர்வலகளுக்கும் ஏற்பட்டுள்ளது. இன்றைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினை முழுமையாகப் பயன்படுத்தி எவ்வாறு பழந்தமிழ் இலக்கியங்களை பல்லூடகவழி அறிவு நிலையிலும் அறிந்துகொள்ளும் நிலையிலும் பரப்புவதற்குரிய கணினிவழித் திட்டமிடுவது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம்.

பல்லூடகவழிப் பழந்தமிழ் இலக்கியங்களைக் கருத்தாடல் வழி எவ்வாறு கற்பது, கற்பிப்பது அதற்கான வழிமுறைகள் என்ன எப்படிச் செயலாற்றுவது. இதுவரை கணினி சார்ந்து நிகழ்ந்த இலக்கிய, இலக்கணக் கருத்தாக்கங்களை எவ்வாறு வளர்த்தெடுப்பது, வளப்படுத்துவது போன்ற செய்திகள் இக்கட்டுரையில் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது,

முதல் முயற்சியாகப் பல்லூடகவழி சங்கத் தமிழுக்கான குறுவட்டினை உருவாக்கியுள்ளேன். இக்குறுவட்டில் உரையாடல் அடிப்படையில் எல்லா வயதினரும் புரிந்துகொள்ளும் வகையில் சங்க இலக்கியங்களை உருவாக்கியுள்ளோம். அவற்றைப் பின்வரும் மூன்று நிலைகளில் வரையறுக்கலாம்.

1. ஆர்வமூட்டல்
2. அறிவூட்டல்
3. திறந்தநிலை இலக்கியம் கற்பித்தல்

இந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள குறுவட்டை கணினி அறிஞர்களின் மேலான கருத்துக்களுக்காக முன்வைக்கிறோம்.